## இன்றுமுதல் தனியார் பால் லிட்டருக்கு ரூ.26 ஆக உயர்வு

First Published : 01 Mar 2011 02:00:37 AM IST

புதுச்சேரி, பிப். 28: புதுச்சேரியில் மார்ச் 1 முதல் தனியார் பால் விற்பனை விலை ரூ.26 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்று புதுச்சேரி தலைமை தனியார் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் நலச் சங்கத் தலைவர் ஆர்.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி அரசு பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.16.50-ல் இருந்து, ரூ.19 ஆக உயர்த்தியுள்ளது. நாங்கள் கிராமப் பகுதியில் விவசாயிகளிடம் இருந்து பாலை லிட்டருக்கு ரூ.19-க்கு கொள்முதல் செய்து, நகரப் பகுதியில் ரூ.22-க்கு விற்பனை செய்து வந்தோம்.

மார்ச் 1 முதல் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.22 ஆகவும், விற்பனை விலையை ரூ.26 ஆகவும் உயர்த்தியுள்ளோம். பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி, எப்பொழுதும் போல் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம் என்று அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## வேளாண் உற்பத்தியைப் பெருக்க ரூ. 2200 கோடி

First Published : 01 Mar 2011 01:03:33 AM IST



புதுதில்லி, பிப். 28: தானிய வகைகள் அல்லாத விவசாய விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்க பட்ஜெட்டில் ரூ. 2200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பருப்பு, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள், கால்நடைத் தீவனம் போன்றவற்றின் விளைச்சலைப் பெருக்க இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இப்போது நடைமுறையில் உள்ள 2 திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்றான கிழக்கு மாநிலங்களில் பசுமைப் புரட்சி திட்டத்துக்கு ரூ. 400 கோடியும், மற்றொன்றான பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க ரூ. 300 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இந்தப் பட்ஜெட்டில் புதிய திட்டங்களாக காய்கறிகளின் உற்பத்தி, எண்ணெய் வித்துகள், சிறிய தானியங்கள், புரோட்டின் செறிவுமிக்க பயிர்கள், கால்நடைத் தீவனங்கள் ஆகியவற்றுக்கு தலா ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக காய்கறி, பால், இறைச்சி, மீன் ஆகியவற்றி விலை மிகவும் அதிகரித்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு காற்கறி பழ வகைகளின் உற்பத்தியைப் பெருக்க இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்று பட்ஜெட்டை தாக்கல் செய்து நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

உணவுப் பொருள்களின் விலை சராசரியாகக் குறைந்துள்ளபோதிலும் இன்னும் கவலை அளிப்பதாகவே உள்ளது. எனவே விளைச்சலை அதிகரிப்பதற்கான புதிய திட்டங்கள் விரைவில் தொடங்கப்படும் என்றார் அவர்.

இப்போது நடைமுறையில் உள்ள ராஷ்ட்ரீய கிரிஷ் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக வரும் நிதி ரூ. 7,860 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டதை விட ரூ. 1105 கோடி அதிகம்.

வேளாண் துறையில் 4 சதவீத வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தின் கீழ் மாநில அரசுகள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன.

பருப்பு வகைகளில் விளைச்சல் கூடுதலாக 20 லட்சம் டன் உயர்ந்துள்ளபோதிலும் அடுத்த 3 ஆண்டுகளில் பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெற திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக பருப்பு வகை பயிர்களைப் பயிரிடும் பரப்பளவை விரிவுபடுத்த இப்போது ரூ. 300 கோடி ஒதுக்கப்படுகிறது என்றார் அவர். இந்த ஆண்டு பருப்பு வகைகளின் உற்பத்தி 165 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமையல் எண்ணெய் இறக்குமதிக்கு நாம் அதிக நிதி செலவிட்டு வருகிறோம். உள்நாட்டு உற்பத்தி நமது தேவையில் பாதி அளவுதான் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு எண்ணெய் வித்து பயிர்களை கூடுதலாக பயிரிட ஊக்கப்படுத்தப்படும். 60 ஹெக்டேரில் எண்ணெய் வித்துகளை பயிரிட ரூ. 300 கோடி ஒதுக்கப்படும். இதன்படி அடுத்த 5 ஆண்டுகளில் 3 லட்சம் டன் எண்ணெய் வித்துகளை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காய்கறிகளின் விலையைக் கட்டுப்படுத்தவும் காய்கறிகள் பயிரிடுவதை ஊக்கப்படுத்தவும் ரூ. 300 கோடிஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இயற்கை விவசாயம்: ரசாயன உரங்களால் மண் வளம் குறைந்து வருவது குறித்து கவலை தெரிவித்த பிரணாப், இயற்கை விவசாயத்தை மேம்படுத்த அரசு ஆதரவு அளிக்கும் என்றார்.

15 உணவுப் பூங்காக்கள்: வேளாண் விளை பொருள்கள் வீணாவதைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதும் பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும். போதிய கிட்டங்கி வசதி இல்லாததால் 40 சதவீத பழங்கள், காய்கறிகள் வீணாகின்றன. இதைத் தடுக்க 15 பெரிய உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அவர் கூறினார்.

அண்மையில் காய்கறி, பழங்களின் விலை உயர்ந்ததால் இவற்றின் விலையைக் கட்டுக்குள் வைக்கவும் விநியோகத்தை சீரமைக்கவும் வேளாண் விளைப்பொருள் சந்தை சட்டத்தை மாநிலங்கள் உரிய வகையில் திருத்த வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார்.

உணவு பதப்படுத்தலுக்கு ரூ. 600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண் விளைபொருள்களை சேமித்து வைப்பதற்கான குளிர்சாதன கருவிகளுக்கு உற்பத்தி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

தனியாருடன் இணைந்து கூடுதலாக 150 லட்சம் டன் விவசாயப் பொருள்களை சேமித்துவைக்க வசதி செய்யப்படும் என்றார் பிரணாப்.

**கரும்பு சாகுபடி: இன்று பயிற்சி முகாம் தொடக்கம்**

First Published : 28 Feb 2011 09:54:23 AM IST

பழனி, பிப். 27: பழனியை அடுத்த அயன்கலையமுத்தூரில் கரும்பு சாகுபடியில் இயந்திரங்கள் குறித்து ஆறு நாள் பயிற்சிமுகாம் நடைபெறுகிறது.

அயன்கலையமுத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் திங்கள்கிழமை (பிப். 28) முதல் ஆறு நாள்களுக்கு இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது.

முதல் நாளன்று பெயர் பதிவு செய்தல் மற்றும் பண்ணை உபகரணங்கள் குறித்த செயல்விளக்கமும், இரண்டாம், மூன்றாம் நாள் அமராவதி சர்க்கரை ஆலையில் இயந்திரம் குறித்து கரும்பு அலுவலர் செந்தில்குமார், கரும்பு, நெல் மற்றும் பயறு சாகுபடி, பாதுகாப்பு குறித்து வேளாண் பொறியியல் துறை பொறியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் விளக்கம் அளிக்கின்றனர். பின்னர் படக்காட்சியும், தாளையம் கால்நடை மருத்துவர் மாணிக்கவாசகத்தின் கால்நடை வளர்ப்பு குறித்த விளக்கமும் இடம் பெறுகிறது.

4-ம் நாள் பொறியாளர்கள் மாணிக்கவாசகம், குமரேசன் ஆகியோர் பாசன மேம்பாட்டுத் திட்டங்கள், சங்கம் அமைத்தல் மற்றும் செயல்பாடுகள், விதை உற்பத்தி மற்றும் பாதுகாப்பு, சொட்டுநீர்ப் பாசன செயல்முறை விளக்கங்கள் குறித்து உரை நிகழ்த்துகின்றனர். 5-ம் நாளன்று 20 பயிற்சியாளர்களை அமராவதி கரும்பு ஆலை, கோவை வேளாண். பல்கலைக்கழகம், கரும்பு ஆராய்ச்சி நிலையம் அழைத்து செல்லுதலும், 6-ம் நாளன்று நீர்வளம், நிலவளம், கரும்பு வயல் நேரடிப் பார்வை குறித்து பொறியாளர்கள் முனியப்பன் விளக்குகிறார்.

மாலையில் பயிற்சி நிறைவு பெற்றோருக்கு சான்றுகளை பழனி வேளாண் உதவிச் செயற்பொறியாளர் நாகராஜன் வழங்குகிறார்.

**ரூ.6.5 லட்சத்துக்கு வழைத்தார் ஏலம்**

First Published : 28 Feb 2011 11:51:53 AM IST

கோபி, பிப். 27: கோபி கூட்டுறவு சங்கத்தில் ரூ.6.5 லட்சம் மதிப்பிலான வாழைத்தார் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

கோபி, மொடச்சூர் சாலையில் உள்ள கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன், சனிக்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெறும்.

கடந்த சனிக்கிழமை 8 ஆயிரம் வாழைத்தார்கள் ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டன. இதில், கதலி கிலோ ரூ.24.30-க்கும், நேந்திரன் ரூ.17, ஒரு தார் செவ்வாழை ரூ.400-க்கும், ரஸ்தாளி ரூ.300-க்கும், தேன்வாழை ரூ.325-க்கும், பூவன் ரூ.250-க்கும், ரோபாஸ்டா ரூ.320-க்கும், மொந்தன் ரூ.275-க்கும், பச்சைநாடான் ரூ.175-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**ரூ. 4 கோடியில் கட்டப்பட்ட தென்னை வணிக வளாகம் திறப்பு**

First Published : 28 Feb 2011 12:55:39 PM IST

பட்டுக்கோட்டை, பிப். 27: பட்டுக்கோட்டை அருகே பொன்னவராயன்கோட்டை ஊராட்சிப் பகுதியில் 26 ஏக்கரில் தமிழக அரசு சார்பில் ரூ. 4 கோடியில் கட்டப்பட்ட தென்னை வணிக வளாகத்தை முதல்வர் கருணாநிதி விடியோ கான்பரன்சிங் மூலம் சென்னையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார்.

தொடர்ந்து, தஞ்சை மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் திட்ட விளக்கவுரையாற்றினார்.

நிகழ்ச்சியில், மாநில அமைச்சர்கள் கோ.சி. மணி, சி.நா.மீ. உபயதுல்லா, சட்டப் பேரவை உறுப்பினர் என்.ஆர். ரங்கராஜன், மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் து. செல்வம், உறுப்பினர் வி. கோவிந்தராஜ், செயலர் எம். மனோகரன், தென்னை நல வாரிய உறுப்பினர் ஆர். கலைச்செல்வன், மாவட்ட ஊராட்சித் தலைவர் செல்வி சிவஞானம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர் மு. ரஞ்சனாதேவி, நகர்மன்றத் தலைவர் இ. பிரியா, முன்னாள் தலைவர் சீனி. இளங்கோ, முன்னாள் எம்எல்ஏக்கள் ஏ.ஆர். மாரிமுத்து, ஏனாதி பாலசுப்பிரமணியன், நகர திமுக செயலர் சீனி. அண்ணாதுரை, முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஏ. பழனிவேலு, ஆர்.கே.என். வேதரெத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொன்னவராயன்கோட்டை ஊராட்சித் தலைவர் ஏ.வி.எஸ். ஜெகதீசன் வரவேற்றார். வேளாண் உயர் மட்டக் குழு உறுப்பினர் வா. வீரசேனன் நன்றி கூறினார்.

**விவசாயத் தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

First Published : 28 Feb 2011 10:50:33 AM IST

பெரியகுளம், பிப். 27:÷பெரியகுளம் அருகே உள்ள வடுகபட்டி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் தரமான பயறு விதைகள் உற்பத்திச் செய்வது குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷முகாமுக்கு, தேனி வேளாண் துணை இயக்குநர் கோவிந்தராஜன் தலைமை வகித்தார். தேனி மண் ஆய்வக வேளாண் அலுவலர் அழகு நாகேந்திரன் முன்னிலை வகித்தார். பெரியகுளம் வேளாண் உதவி இயக்குநர் ஆர்.பெரியசாமி வரவேற்றார்.

÷முகாமில், துவரை, பாசிப்பயறு, உளுந்து, தட்டப்பயறு ஆகியவற்றின் விதைகளைத் தரம் பிரித்து பராமரித்தல், உலர்த்துதல், விதைகளைச் சுத்திகரிப்புச் செய்தல், பயறு சாகுபடியில் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், புறத் தூய்மை உடைய இனக் கலப்பில்லாத பயறுவகை விதைகளை உற்பத்தி செய்வது குறித்து விளக்கக் கூறப்பட்டது.

÷மேலும், மண் மற்றும் நீர் மாதிரி எடுக்கும் முறைகள், களர் உவர் மண்ணை சீர்படுத்தும் முறைகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

÷வடுகபட்டி, மேல்மங்கலம், தாமரைக்குளம், எண்டப்புளி, பெரியகுளம், பொம்மிநாயக்கன்பட்டி, அம்மாபட்டி, டி.கள்ளிப்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி, முதலக்கம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 விவசாயிகள் பங்கேற்றனர்.

÷பெரியகுளம் தோட்டக் கலைக் கல்லூரி இணைப் பேராசிரியை கீதாராணி, விதைச்சான்று அலுவலர் ராஜகுரு, உதவி வேளாண் அலுவலர்கள் அறிவுடை நம்பி, தனபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**உற்பத்தி மிகுதியால் பூ விலை சரிவு : பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,01:17 IST

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில் பூக்களின் உற்பத்தி மிகுந்துள்ளதால், அவற்றின் விலை பாதியாக சரிந்துள்ளது. வரும் மாதத்தில் அவற்றின் விலை மேலும் குறைவதற்கு வாய்ப்புள்ளதால், பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டத்துக்கு உட்பட்ட ராசிபுரம், பரமத்தி, மோகனூர், எருமப்பட்டி, கொல்லிமலை அடிவாரம் உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தில் மல்லிகை, கனகாம்பரம் உள்ளிட்ட பல்வேறு வகையான பூ சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பூக்கள் நாமக்கல் பஸ் ஸ்டாண்டில் நாள்தோறும் கூடும் பூ கமிஷன் மண்டிக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கு, மாவட்டம் முழுவதும் இருந்து குவியும் வியாபாரிகள், அவற்றை விற்பனைக்கு வாங்கிச் செல்வது வழக்கம். பூக்களின் தேவைக்கு தகுந்தாற் போல், அதன் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் நிலவி வந்த கடுங்குளிர் காரணமாக, பூ உற்பத்தி குறைந்து காணப்பட்டது. அதே நேரத்தில் பண்டிகை, முகூர்த்த சீஸன் சமயம் என்பதால், அவற்றின் தேவை மிகுந்திருந்தது. அதனால், பூக்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்தது. ஒரு கிலோ மல்லிகை 700 ரூபாய் வரை விற்பனையானது. அதுபோல், மற்ற பூக்களின் விலையும் கணிசமான அளவில் உயர்ந்து காணப்பட்டது.

தற்போது குளிர் சீஸன் விடுபடத் துவங்கியுள்ளது. அதன் எதிரொலியாக பூக்களின் உற்பத்தியும் அதிகரிக்கத் துவங்கியுள்ளது. உற்பத்தி மிகுதி காரணமாக பூ விலை சரிவைக் காணத் துவங்கியுள்ளது. பூக்கள் விலை சரிவு விவசாயிகள், வியாபாரிகளை கவலையில் ஆழ்த்தியது ஒரு புறம் இருந்தாலும் மக்களை மகிழ்ச்சியடைச் செய்துள்ளது. இது குறித்து நாமக்கல் பூ வியாபாரி ஒருவர் கூறுகையில், ""ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதத்தில் பூ உற்பத்தி குறைந்து காணப்படும். அதிக குளிரால் உற்பத்தி குறைந்திருக்கும். தற்போது குளிர் சீஸன் முடிந்துள்ளதால், உற்பத்தி அதிகரித்துள்ளது.

""கடந்த மாதம் வரை 700 ரூபாய் மற்றும் அதற்கு அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ மல்லிகை விலை தற்போது பாதியாக குறைந்துள்ளது. கனகாம்பரம், ரோஜா

உள்ளிட்ட பூக்களின் விலையும் குறைந்துள்ளது. தற்போது உற்பத்தி மிகுந்திருப்பதால், அவற்றின் விலை சரிந்துள்ளது. வரும் மாதங்களில் பூக்களின் விலை மேலும் சரிவதற்கு வாய்ப்புள்ளது," என்றார்.

**சாமந்திப்பூ விளைச்சல் அதிகரிப்பு விலை சரிவால் விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,01:33 IST

ஈரோடு: சாமந்திப்பூ விளைச்சல் இரு மடங்கு அதிகரித்த போதும், பூ விலை கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தமிழகத்தில் ஓசூர், சேலம், ஆத்தூர், தர்மபுரி, மதுரை, திண்டுக்கல், ஈரோடு, சத்தியமங்கலம், சுற்றுவட்டார பகுதியில் அதிகளவு விவசாயிகள் பூக்களை விளைவிக்கின்றனர். பூக்களில் இருந்து வாசனை திரவியங்கள், கலர் மற்றும் பவுடர்கள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. தமிழகத்தில் கோவில், திருமணம் மற்றும் வீட்டு விசேஷங்களுக்கு பூக்கள் அதிகம் தேவைப்படுகிறது. சத்தி பகுதியில் சாமந்தி பூ அதிகம் விளைகிறது. வடமாநிலங்களில் விநாயகர் சதுர்த்தி, தசரா, ஹோலி பண்டிகையின் போது, இங்கிருந்து, வடமாநிலங்களுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்கின்றனர். நடப்பாண்டு சாமந்திப் பூ விளைச்சல் இரு மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால், தேவை குறைந்துள்ளதால், பூக்கள் தேக்கம் அதிகரித்துள்ளது. விலையும் கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. விளைச்சல் அதிகமான காரணத்தால், சென்ட் தயாரிக்கும் ஆலை உரிமையாளர்களும், விலையை குறைத்து, கிலோ நான்கு ரூபாய்க்கு வாங்கி செல்கின்றனர். விவசாயிகள் லாபமின்றி பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இது குறித்து சத்தி பூ விவசாயி பெருமாள் கூறியதாவது: தமிழகத்தில், தற்போது அனைத்து வகையாக பூக்கள் அறுவடை நடக்கிறது. சென்றாண்டை விட, நடப்பாண்டு பூக்கள் விளைச்சல் இரு மடங்காக அதிகரித்துள்ளது. அனைத்து வகையான பூக்கள் விலை உயர்ந்துள்ள நிலையில், சாமந்தி விலை மட்டும் மிக குறைவாக உள்ளது. நடப்பாண்டு பூக்கள் விளைச்சலும் அதிகமாக இருக்கிறது. ஒரு செடியில் 20 முதல் 25 பூக்கள் மலர்கின்றன. ஏக்கருக்கு எட்டு டன் வரை உற்பத்தியாகிறது. பூ மார்க்கெட்டில் மாலை கட்ட சாமந்தி பூவை கிலோ 15 ரூபாய்கு வாங்கி சென்று, அதிக விலைக்கு விற்கின்றனர். நறுமணம் தயாரிப்பு ஆலைகள், கிலோ நான்கு ரூபாய்க்கு மட்டுமே விலை தருகின்றன. விலை சரிவால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மூங்கில் சாகுபடி கருத்தரங்கம் பெரம்பலூர் கலெக்டர் துவக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,00:05 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் கவுல்பாளையத்தில் மூங்கில் சாகுபடி கருத்தரங்கம் நடந்தது.கருத்தரங்கை மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தொடங்கி வைத்து பேசியதாவது: விவசாயிகள் தங்கள் உழைப்பிற்கேற்ற லாபத்தை பெற வேண்டும் நோக்கத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை ஆகிய துறைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போதைய காலகட்டத்தில் பல்வேறு மாசுக்களுக்குகிடையே நகரத்தில் உள்ள மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், விவசாயிகள் இயற்கையோடு இணைந்து வாழ்வை வாழ்கிறார்கள். மூங்கில் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு, பிராண வாயுவை அதிக அளவில் வெளியிடுவதால் சுற்றுச்சூழலை மாசற்றதாக மாற்றப்படுகிறது. விவசாயிகளுக்கு சிறந்த வருமானத்தை பெற்றுத்தருவதில் மூங்கில் பயிர் முக்கியப்பங்கு வகிக்கிறது. தற்போது தோட்டக்கலைத்துறையின் மூலம், முள்ளில்லா மூங்கில் புதிதாக சாகுபடி செய்ய மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொண்டு அதிகலாபம் பெற்று தங்கள் பொருளாதார தரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் விவசாயிகளுக்கு மூங்கில் சாகுபடி செய்வதற்காக, மூங்கில் கன்றுகளை கலெக்டர் விஜயகுமார் வழங்கினார். கருத்தரங்கில் வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) ராஜராஜசோழன், மாவட்ட வன அலுவலர் (பொறுப்பு) குருசாமி, வன விரிவாக்க அலுவலர் சொர்ணப்பா, பருத்தி ஆராய்ச்சி மைய தோட்டக்கலை உதவி பேராசிரியர் மொதனலெட்சுமி உட்பட பலர் பங்கேற்றனர். தோட்டக்கலை துணை இயக்குநர் சவுந்தர்ராஜன் வரவேற்றார். உதவி இயக்குநர் தாகூர் நன்றி கூறினார்.

**மரக்கன்று வளர்க்க நிதியுதவி**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,02:29 IST

பாலமேடு:பாலமேட்டில் வனத்துறை சார்பில் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பவர்களுக்கு நிதியுதவி வழங்கும் விழா நடந்தது. மதுரை சமூக காடுகள் தீவிர மரம் வளர்க்கும் திட்டம் சார்பில் தனியார் நிலங்களில் மரம் வளர்க்க மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. மரக்கன்று வளர்ப்பதற்கு தேவையான ஊக்கத்தொகை வழங்கும் விழா மதுரை புறநகர் மாவட்ட அளவில் பாலமேட்டில் நடந்தது. பாலமேடு பேரூராட்சி தலைவர் பிரேமா தலைமை வகித்தார். துணை தலைவர் பாலசுப்பிரமணி முன்னிலை வகித்தார். மண்டல வன பாதுகாவலர் பாரதி பயனாளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி பேசியதாவது: பூமி வெப்பமயமாவதை தடுக்க மரம் வளர்ப்பது அவசியம்.

நகரங்களில் வசிப்பவர்கள் வாகனங்கள்,தொழிற்சாலைகள், வெப்பக்காற்று காரணமாக பல வித தொற்று நோய்க்கு ஆளாகி வருகின்றனர். இயற்கை சூழ்நிலை காரணமாக கிராமங்களை நோக்கி நகரத்தார் வரும் நிலை உருவாகி வருகிறது. நகரப்பகுதியில் பூமி வெப்பமயமாவதை தடுக்க வழியில்லை.

அதனால் கிராமப்புறங்களில் சமூக காடுகள் திட்டம் சார்பில் தனியார் நிலங்களில் அரசு ஊக்கத்தொகையுடன் தேக்கு, குமிழ், சவுக்கு, இலவம் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது. அலங்காநல்லூர், பாலமேடு, வாடிப்பட்டி, உசிலம்பட்டி, திருப்பறங்குன்றம், மதுரை கிழக்கு,மேற்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப் பட்டுள்ளது என பேசினார். மாவட்ட வன அலுவலர் செண்பக மூர்த்தி,வனவர்கள்சூர்யநாராயணன், உட்பட பணியாளர்கள் பங்கேற்றனர். கிருஷ்ணன் நன்றி கூறினார்.

**மூலிகை சாகுபடி ஊக்குவிக்க தேசிய தோட்டக்கலை வாரியம் முடிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,00:40 IST

புதூர் : மூலிகை சாகுபடியை ஊக்குவிக்க தேசிய தோட்டக் கலை வாரியம் முடிவு செய்துள்ளது. இதற்கென மாநில தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மருத்துவத்தில் மூலிகைகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மூலிகை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் பல உதவிகளை செய்கின்றன. பல மானிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சாகுபடி செய்யும் மூலிகைகளை கொள்முதல் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இருந்த போதும் தற்போது தேசிய தோட்டக்கலை வாரியம் மேலும் பல சலுகைகளை வழங்க முடிவு செய்துள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது, இந்தியாவின் மூலிகை தேவை 3.20 லட்சம் டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலக மார்க்கெட்டில் மூலிகை வர்த்தகம் 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நடக்கிறது. இந்தியாவில் இருந்து 1,250 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் வனப்பகுதிகளில் மூலிகை சாகுபடிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை அதற்கான பணிகளில் இறங்கியுள்ளது. மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களையும் இந்த பணியில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்களும் மூலிகை சாகுபடிக்கு தேவையான நர்சரி, சாகுபடி முறைகள் மானிய உதவி,மார்க்கெட்டிங் போன்ற வசதிகள் செய்து தரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரிவான அறிவிப்புகள் விரைவில் தோட்டக்கலைத்துறை சார்பில் வெளியிடப்படும் என்றனர்.

**தர்ப்பூசணி பழங்கள் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,01:16 IST

ஈரோடு: ஈரோட்டுக்கு தர்ப்பூசணி பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. முன்பெல்லாம் தர்ப்பூசணி பழங்கள் மார்ச், ஏப்ரல், மே மாதத்தில் மட்டுமே விற்பனைக்கு வரும். காலப்போக்கில், தர்ப்பூசணி பழங்களை சாப்பிடுவோர் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. அதற்கு காரணம், சர்க்கரை வியாதி உள்ளோர் தர்ப்பூசணி பழங்களை சாப்பிடலாம் என்ற கருத்து பரவலாக கூறப்பட்டது. கோடை காலத்தில் இளநீர் சாப்பிட 15 ரூபாய் செலவாகிறது. திராட்சை ஜூஸ் 15 ரூபாய், லெமன் 10 ரூபாய், முலாம்பழம் 20 ரூபாய் மற்ற ஐஸ்கிரீம் வகைகள் குறைந்தது 10 ரூபாயில் இருந்து 40 ரூபாய் வரை செலவாகிறது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அதிகளவு தர்ப்பூசணி பழங்களை விரும்ப ஆரம்பித்தனர்.

சென்றாண்டு தர்ப்பூசணி பழம் ஒரு துண்டு மூன்று ரூபாய்க்கு விற்கப்பட்டது; தற்போது ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ தர்ப்பூசணி பழம் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நடப்பாண்டு ஜனவரி மாத இறுதியிலேயே தர்ப்பூசணி பழங்களின் வரத்து அதிகரிக்கத் துவங்கியது. தற்போது, ஈரோடு நகரில் எங்கு பார்த்தாலும் தர்ப்பூசணி பழங்கள் குவித்து வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. பெங்களூரு, திண்டிவனம், விழுப்புரம் போன்ற இடங்களில் இருந்து ஈரோடு மாவட்டத்துக்கு லாரி, லாரியாக தர்ப்பூசணி பழங்கள் வரத்தாகின்றன. ஈரோடு மாவட்டத்தில் கோபியை சுற்றி சில கிராமங்களிலும் தர்ப்பூசணி பழங்கள் அறுவடையாகின்றன. திருப்பூர் மாவட்டம் குண்டடம், தாராபுரம் பகுதியிலும் தர்ப்பூசணி பழங்கள் அறுவடை நடந்து வருகிறது. ஒரு கீற்று சாப்பிட்டாலே வயிறு நிரம்பும் வகையில் பழம் உள்ளதால், பலரும் விரும்பி சாப்பிடுகின்றனர். ஒரு மாதத்துக்கு பிறகு பழத்தின் விலை குறைய வாய்ப்புள்ளது.

**ரூ.3 லட்சத்துக்கு காய்கறி விற்பனை பல்லடம் உழவர் சந்தையில் சாதனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,23:09 IST

பல்லடம் : பல்லடம் வாரச்சந்தை வளாகத்தில் 48 சென்ட் இடத்தில் ரூ.25 லட்சம் மதிப்பில் 30 கடைகளுடன் கூடிய உழவர் சந்தையை, கோவை விற்பனைக்குழு தலைவர் நாச்சிமுத்து நேற்று திறந்து வைத்தார். சந்தைக்கு 102 விவசாயிகள் காய்கறி கொண்டு வந்திருந்தனர். 30 கடைகள் மட்டுமே இருந்ததால் ஒரே கடையில் இரண்டு, மூன்று விவசாயிகள் சேர்ந்து காய்கறிகளை விற்பனை செய்தனர். 20க்கும் மேற்பட்ட விவசாயிகள், கீரை, கருவேப்பிலை, புதினா வகை களை

பிளாட்பாரத்தில் கடை விரித்து, விற்றனர். மொத்தம் 22 ஆயிரத்து 500 கிலோ காய்கறி, பழங்கள் விற்பனைக்கு வந்தன. ரூ.இரண்டு லட்சத்து 99 ஆயிரத்துக்கு காய்கறி, பழங்கள் விற்றன. 2,496 பொதுமக்கள் காய்கறி, பழங்கள் வாங்கிச் சென்றனர். தினமும் காலை 4.00 முதல் 10.00 மணி வரை உழவர் சந்தை செயல்படும் என வேளாண் அலுவலர் லீலாவதி தெரிவித்தார். திறப்பு விழாவில், நகராட்சி தலைவர் ராமமூர்த்தி, வேளாண் துணை இயக்குனர் சுப்ரமணியம், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சுகந்தி, தாசில்தார் ஜீவா உட்பட பலர் பங்கேற்றனர்.

**"விவசாயிகளை ஏமாற்றிய மத்திய பட்ஜெட்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,23:06 IST

திருப்பூர் : ""மத்திய பட்ஜெட், விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது,'' என தமிழக விவசாயிகள் சங்க ( கட்சி சார்பற்றது) தலைவர் பழனிசாமி கூறினார்.அவர் மேலும் கூறியதாவது: விவசாயிகளின் கடன்களுக்கு ஏழு சதவீத வட்டி என்பதும், தவணை முறையை சரியாக செலுத் தினால் நான்கு சதவீத வட்டி என்பதும் பெரிய சலுகை அல்ல; ஆடம்பரமான கார் வாங்குவதற்கே ஏழு சதவீத வட்டிதான் பெறப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளில் வழங்குவதுபோல், தேசிய வங்கிகளிலும் விவசாயிகளின் கடன் களுக்கு நான்கு சதவீத வட்டி வசூலிப்பதே சரியாக இருக்கும்; பட் ஜெட்டில் இந்த அறிவிப்பு இல்லை. விவசாயத்தில் ஆட்கள் பற்றாக்குறை பிரச்னை உள்ளது; விவசாயத்தை இயந்திரமயமாக்க, அதற்கான விவசாய கருவிகளுக்கு மானிய விலை அறிவிக்கப்படவில்லை. ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளின் விலை பன்மடங்கு உயர்ந் துள்ளதால், விவசாயிகள் பலரும் இயற்கை விவசாயத்துக்கு மாறி வருகின்றனர்; இயற்கை விவசாயத்துக்கு சலுகைகள் எதுவும் இல்லை. விமான நிலைய விரிவாக்கம், நான்கு வழிச் சாலை, சிறப்பு பொருளாதார மண்டலம், சிப்காட் தொழிற்பேட்டை போன்ற காரணங்களுக்காக விவசாய நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆனால், சந்தை மதிப்பு வழங்கப்படுவது இல்லை. சந்தை மதிப்பில் 10 சதவீத விலை கூட விவசாயிகளுக்கு கிடைப்பது இல்லை. விவசாய உற் பத்தி நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடாது; அப்படி செய்தாலும் அதற்குரிய சந்தை விலை வழங்க வேண்டும் என்பது குறித்த அறிவிப்பு பட்ஜெட்டில் இல்லை. பருத்தி, வெங்காயம், உணவு தானியங்களின் உற்பத்தி உயராத நிலையில், விவசாய வளர்ச்சி 5.5 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பட்ஜெட்டில் கூறியிருப்பதை ஏற்க முடியாது. குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் கடன் சுமைகளால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். விவசாயிகளை காப்பாற்ற கடன் தள்ளுபடி போன்ற திட் டங்களும் பட்ஜெட்டில் இல்லை. மத்திய பட் ஜெட்டை பொருத்தவரை விவசாயிகளுக்கு ஏமாற்றத் தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது, என்றார்.

**நிலக்கடலை சாகுபடி; விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,23:27 IST

பொங்கலூர் : நான்கு மாத பயிரான நிலக்கடலை மணல் கலந்த செம்மண் நிலங்களில் நன்கு வளரும் இயல்புடையது. பொங்கலூர் பகுதியில் நிலக்கடலை சாகுபடி செய்வதற்கேற்ற மண் வளம் இருப்பதால், பெரும்பாலான விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி செய்து வந்தனர்.சில ஆண்டுகளாக தண்ணீர் மற்றும் ஆட்கள் பிரச்னை, கட்டுப்படியான விலை கிடைக்காமை போன்ற காரணங்களால், நிலக்கடலை சாகுபடி செய்வதை விவசாயிகள் குறைத்துக் கொண்டனர்.

தற்போது, தண்ணீர் பிரச்னை தீர்ந்துள்ளதாலும், மார்க்கெட்டில் நல்ல விலை கிடைப்பதாலும் நிலக்கடலை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.நிலக்கடலை சித்திரை மற்றும் தை ஆகிய இரண்டு பட்டங்களில் இப்பகுதியில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை, தற்போது நன்கு செழித்து வளர்ந்துள்ளது. இதனுடைய செடி, பருப்பு, ஓடு போன்ற அனைத்து பாகங்களும் பயன்படுகின்றன. இதனால், இதற்கான தேவை அதிகளவில் இருந்து கொண்டே இருக்கிறது.இங்கு விளையும் நிலக்கடலை, தள்ளுவண்டி வியாபாரிகள், மிட்டாய் தயாரிப்பாளர்கள், எண்ணெய் ஆலை அதிபர்கள் ஆகியோரால் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது.

இவை எண்ணெய் எடுக்க, காங்கயம், வெள்ளகோவில் பகுதிகளுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. கடலை எண்ணெய்க்கான தேவை அதிகம் இருப்பதால், தொடர்ந்து நல்ல விலைக்கு விற்பனையாகிறது. இதனால், கடலை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பதநீர் விற்பனை துவக்க விழா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,23:16 IST

சிதம்பரம் : பதநீர் விற்பனை செய்ய அரசு அனுமதி அளித்ததையொட்டி சிதம்பரத்தில் பதநீர் விற்பனை தொடங்கி வைக்கப்பட்டது. பனை, தென்னையில் பதநீர் இறக்கி விற்பனை செய்ய தமிழக அரசு உரிமம் வழங்கியுள்ளது. அதையொட்டி மாவட்ட நாடார் பேரவை சார்பில் சிதம்பரத்தில் பஸ் நிலையத்தில் நேற்று பதநீர் விற்பனை தொடங்கி வைக்கப்பட்டது. மாவட்டச் செயலர் ராஜவேல், தலைவர் ராஜா பங்கேற்றனர்.

**மரக்கன்று வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,23:12 IST

கடலூர் : பிளஸ் தொண்டு நிறுவனம் சார்பில் எண்ணா நகரம் கிராமத்தில் அனைத்து வீடுகளுக்கும் மரக்கன்று வழங்கப்பட்டது. கீரப்பாளையம் அடுத்த எண்ணா நகரம் கிராமத்தில் உள்ள அன்னை வேளாங்கன்னி நடுநிலைப் பள்ளி சார்பில் கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது. ஊராட்சி தலைவர் மகாலிங்கம் தலைமை தாங்கினார். பாரதியார் கிராம வங்கியின் இயக்குனர் பாலச்சந்தர் பயனாளிகளுக்கு மரக்கன்று வழங்கினார். மேலும், கிராமத்தின் அடிப்படை தேவைகளை மக்களின் பங்களிப்புடன் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் பிளஸ் தொண்டு நிறுவன நிர்வாக இயக்குனர் அந்தோணிசாமி, ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து, கோமதி, பெரியநாயகி பங்கேற்றனர்.

**மானிய விலையில் நடவு இயந்திரம் கலெக்டர் சீத்தாராமன் வழங்கினார்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2011,23:10 IST

கடலூர் : அரசு மானிய விலையில் நெல் நடவு இயந்திரத்தை விவசாயிகளுக்கு கலெக்டர் சீத்தாராமன் நேற்று வழங்கினார். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தும்போது விவசாய கூலித்தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாகி வருகிறது. அதையொட்டி கலெக்டர் சீத்தாராமன் இயந்திரத்தின் மூலம் நடவு செய்தல், களை யெடுத்தல், உழவு செய்தல் போன்றவற்றை செய்து முடிக்க வலியுறுத்தி வருகிறார். அதன் தொடர்ச்சியாக நெல் நடவு செய்யும் இயந்திரம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. நேற்று 9.8 லட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன நடவு இயந்திரத்தை (4 லட்சம் ரூபாய் மானிய உதவி) கரைமேட்டைச் சேர்ந்த ஞானவேல் என்பவருக்கு கலெக்டர் சீத்தாராமன் வழங்கினார். அதேப்போன்று பவர் டில்லர் 4 பேருக்கும், நர்சரி டிரே ஆகியவையும் கலெக்டர் சீத்தாராமன் மானிய விலையில் வழங்கினார். டி.ஆர்.ஓ., ராஜேந்திரன், நேர்முக உதவியாளர் அசோகன், உதவி செயற்பொறியாளர் பாண்டியன், பிரிவு அலுவலர்கள் சேகர், பாலசுப்ரமணியன் உடனிருந்தனர்.

# விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் கடன் கூடுதலாக ரூ.1 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு

புதுடெல்லி, மார்ச்.1–

விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் கடன் வழங்கப்படும் என்றும், கூடுதலாக ரூ.1 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாகவும் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

வட்டி குறைப்பு

பொது பட்ஜெட்டில், விவசாயிகளுக்கு அதிக சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி, தனது பட்ஜெட் உரையில் பிரணாப் முகர்ஜி கூறியதாவது:–

கடந்த பட்ஜெட்டின்போது, 9 சதவீத வட்டியில், குறுகிய கால பயிர்க்கடன் வாங்கும் விவசாயிகளுக்கு, அவர்கள் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தி இருந்தால், 2 சதவீத வட்டி குறைப்பு (மானியம்) அளிக்கப்படும் என்று அறிவித்தேன்.

இதனால் அவர்கள் 7 சதவீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டியிருந்தது.

கூடுதலாக கடன்

7 சதவீத வட்டியில் கடன் வழங்கும் திட்டம், வரும் நிதியாண்டிலும் நீடிக்கும். உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தினால், கூடுதலாக 3 சதவீத வட்டி குறைப்பு அளிக்கப்படும். எனவே, அத்தகைய விவசாயிகள் 4 சதவீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டி இருக்கும்.

பருப்பு உற்பத்தி

மேலும், விவசாயிகளுக்கு கூடுதலாக ரூ.1 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதாவது, மொத்தம் ரூ.4 லட்சத்து 75 ஆயிரம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகஅளவில் கடன் வழங்குமாறு வங்கிகளுக்கு அறிவுரை கூறியுள்ளோம்மெட்ரோ நகரங்களில் காய்கறிகள் தங்குதடையின்றி கிடைக்க செய்வதற்காக, ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் எண்ணை பனை உற்பத்தி

*செய்வதற்காக, ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.*

*பருப்பு விளைவிக்கும் 60 ஆயிரம் கிராமங்களில் பருப்பு உற்பத்தியை அதிகரிக்க ரூ.300 கோடி ஒதுக்கப்படும். கிழக்கு மாநிலங்களில், அரிசி உற்பத்தியை பெருக்க ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.*

*ராஷ்ட்ரீய கிரிஷி விகாஸ் யோஜனாவுக்கான நிதி ஒதுக்கீடு, ரூ.6,755 கோடியில் இருந்து ரூ.7,860 கோடியாக உயர்த்தப்படுகிறது. குறுகிய கால கடன் நிதியாக 'நபார்டு' வங்கிக்கு ரூ.10 ஆயிரம் கோடி வழங்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.*

# விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் கடன்



## கூடுதலாக ரூ.1லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு

புதுடெல்லி, மார்ச்.1-

விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் கடன் வழங்கப்படும் என்றும், கூடுதலாக ரூ.1 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாகவும் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

### வட்டி குறைப்பு

பொது பட்ஜெட்டில், விவசாயிகளுக்கு அதிக சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி, தனது பட்ஜெட் உரையில் பிரணாப் முகர்ஜி கூறியதாவது:-

கடந்த பட்ஜெட்டின்போது, 9 சதவீத வட்டியில், குறுகிய கால பயிர்க்கடன் வாங்கும் விவசாயிகளுக்கு, அவர்கள் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தி இருந்தால், 2 சதவீத வட்டி குறைப்பு (மானியம்) அளிக்கப்படும் என்று அறிவித்தேன். இதனால் அவர்கள் 7 சதவீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டியிருந்தது.

7 சதவீத வட்டியில் கடன் வழங்கும் திட்டம், வரும் நிதியாண்டிலும் நீடிக்கும். உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தினால், கூடுதலாக 3 சதவீத வட்டி குறைப்பு அளிக்கப்படும். எனவே, அத்தகைய விவசாயிகள் 4 சதவீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டி இருக்கும்.

### கூடுதலாக கடன்

மேலும், விவசாயிகளுக்கு கூடுதலாக ரூ.1 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதாவது, மொத்தம் ரூ.4 லட்சத்து 75 ஆயிரம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். சிறு, குறு விவசாயிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்குமாறு வங்கிகளுக்கு அறிவுரை கூறியுள்ளோம்.

### பருப்பு உற்பத்தி

மெட்ரோ நகரங்களில் காய்கறிகள் தங்குதடையின்றி கிடைக்க செய்வதற்காக, ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் எண்ணை பனை உற்பத்தி செய்வதற்காக, ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

பருப்பு விளைவிக்கும் 60 ஆயிரம் கிராமங்களில் பருப்பு உற்பத்தியை அதிகரிக்க ரூ.300 கோடி ஒதுக்கப்படும். கிழக்கு மாநிலங்களில், அரிசி உற்பத்தியை பெருக்க ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

ராஷ்ட்ரீய கிரிஷி விகாஸ் யோஜனாவுக்கான நிதி ஒதுக்கீடு, ரூ.6,755 கோடியில் இருந்து ரூ.7,860 கோடியாக உயர்த்தப்படுகிறது. குறுகிய கால கடன் நிதியாக 'நபார்டு' வங்கிக்கு ரூ.10 ஆயிரம் கோடி வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.